1979 ஏப்ரல் 19]

[பேரவைத் தலைவர்]

1978-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 20-ம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடையையும் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8-ம் நாளன்று அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தையும் கூர்ந்து கவனித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அளித்த விளக்கத்தையும் நன்கு கவனித்தேன்.

அமைச்சர் அவர்கள் முதலிலிருந்தே சில தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனவும் அதனால் நிர்வாகத்தினர் தம் சம்மதத்தைத் திரும்பப் பெற்றனர் என்றும் கூறியிருக்கிறார். எனவே தொழிலாளர்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்றோ அல்லது தொழிலாளர்களைப் பற்றி எந்தவிதமான தவறான கருத்தையும் தெரிவித்தார் என்று கூறுவதற்கோ எந்தவிதமான ஆதாரமும் காட்டப்படவில்லை.

எனவே இப்பிரச்சினையில் அவை உரிமை மீறிய செயல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஈ) உணவுத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்து அவையில் விளக்கம் அளித்தார். அவர் கொடுத்த அறிவிப்பிலும் அவையில் அளித்த விளக்கத்திலும் மாண்புமிகு அமைச்சர் எந்தெந்த விதத்தில் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்தார் என்பதைப் பற்றி விளக்கமான கருத்து எதுவும் கூறவில்லை.

அதற்கு மாறாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்களின் சம்பள விகிதங்களையும், மற்றக் கழகங்களின் ஊழியர்களின் சம்பள விகிதங்களையும் கொடுத்து விளக்கியுள்ளார். மேலும் பொது நிறுவனங்களில் சில லாபத்திலும் சில நட்டத்திலும் நடைபெறுகின்றன என்பதையும் விளக்கியுள்ளார்.

ஆனால் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த விதத்தில் அவைக்குத் தவறான தகவலை அளித்தார் என்பதைக் கூறாமல் நுகர் பொருள் வாணிபக் கழகம் நட்டத்தில் இயங்குகிறது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்தை எடுத்துக் கொண்டு அந்த நட்டம் எதனால் ஏற்பட்டது என்பதை விளக்க முற்பட்டார். இது இப்பிரச்சினைக்குத் தேவை இல்லாதது. அமைச்சர் கொடுத்த தகவல் சரியா, தவறா? தவறு என்றால் எப்படித் தவறு என்பதைத்தான் விளக்க வேண்டும்.

எனவே திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.